வாடிப்பட்டி வட்டம், பாலமேடு கிராமத்தை மையமாகக்கொண்டு தனி யூனியன் அமைத்தல்.

423—(*வினா எண் 12202) திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், பாலமேடு கிராமத்தை மையமாகக் கொண்டு தனி யூனியன் அமைக்கப் படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இதுபற்றிய கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆ. சந்திரசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் பாலமேடு அலங்காநல்லூர் ஒன்றியத்திலே இருந்து இயங்கிக்கொண்டிருக்கிறது. அலங்காநல்லூர் ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியமாக இருக்கிறது. 39 பஞ்சாயத்துக்களைக் கொண்டு அது இயங்குகிறது. அது பெரிய ஒன்றியமாக இருக்கிற காரணத்தினாலும், பல்வேறு மானியங்களைப் பெறுகிறபோது எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் மானியங்களைப் பிரித்துக் கொடுப்பதிலே கஷ்டம் இருப்பதாலும், மேலும் அதிகமான தூரத்திலே இருப்பதாலும் அதை இரண்டாகப் பிரித்து பாலமேடு என்று தனி ஒன்றியத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைப்பது என்பது அந்த ஊராட்சி ஒன்றியங்களின் தீர்மானம், ஊராட்சி களின் தீர்மானம், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தீர்மானம் ஆகியவற்றைப் பெறவேண்டும். அதோடு மட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றியங்கள் ஆரிக்கப்பட வேண்டுமென்றால் அ வாறு பிரிக்கப் பட்ட பின் ஏற்பட இருக்கும் ஒன்றியத்தில் மக்கள் தொகை, நிர்வாக வசதி, நிதி நிலைமை, தனித்து இயங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முடிவு

1987 ஏப்ரல் 21]

எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் வாடிப்பட்டியை வைத்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கவேண்டு மென்ற கருத்தைப் பரிசீலிக்கிறோம்.

திண்டுக்கல்லில் புதிய காய்கறி மார்க்கெட்.

424—(* வினா எண் 12315) திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திண்டுக்கல்லில் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ள காய்கறி மார்க்கெட்டை மாற்றி புதிதாக மார்க்கெட் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் அமைந்திருக்கக்கூடிய காய்கறி மார்க்கெட் 'ஹார்ட் ஆப் தி சிடி' என்று சொல்லக்கூடிய முறையிலே மிகவும் இடைஞ்சலான இடத்தில் அமைந்திருக்கிற காரணத்தினால் போக்குவரத்து தடைப்படுகின்ற நிலை இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு விரைவிலே நல்ல ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து இந்தக் காய்கறி மார்க்கெட்டை மாற்றுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மார்க்கெட்டை சிலுவத்தூர் சாலையின் தென் பக்கம் உள்ள அரசு புறம்போக்கு குளத்தில் சுமார் 5 ஏக்கர் நிலத்திலே அமைக்கவேண்டி அவ்விடத்தை நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்து கொடுக்க நகரமன்றத்தின் ஒப்புதலுடன் அண்ணா மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாற்றம் செய்து கொடுக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக நான் தொகுதி